Chennai Metro Rail Limited

# சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

**செய்தி வெளியீடு**
**28.01.2010**

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 2வது மற்றும் 3வது ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியுள்ளது

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு, உயர்த்தப்பட்ட இரயில் பாதை கட்டுவதற்காக மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

அசோக் நகரிலிருந்து பரங்கிமலை வரை உயர்த்தப்பட்ட இரயில் பாதை (இரயில் நிலையங்கள் தவிர) வடிவமைத்துக் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி திருவாளர்கள் லார்சன் & டூப்ரோ லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ 141.13 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது ஒப்பந்தப்புள்ளியாக, சைதாப்பேட்டையிலிருந்து இராணுவ பயிற்சி மையம் (Officers Training Academy) வரை உயர்த்தப்பட்ட இரயில் பாதை (இரயில் நிலையங்கள் தவிர) வடிவமைத்துக் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி திருவாளர்கள் லார்சன் & டூப்ரோ லிமிடெட் நிறுவனத்திற்கு 25.01.2010 அன்று ரூ 173.30 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள தொகை தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி தவிர மற்ற அனைத்து வரிகளும் உட்பட்ட தொகையாகும்.

(எஸ். கிருஷ்ணமூர்த்தி)
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்